Department of Education, Sabaragamuwa Province/ Weekly School Department of Education, Sabaragamuwa Province/ Weekly School

## சபரகமுவ மாகாண கல்வித் திணைக்களம்
## வார பாடசாலை

வாரம் 01

பாடம்:- பொருளியல்

தயாரிப்பு:- திருமதி .F. றிஸ்லா BA (Hons)
இ/ ஸ்ரீ கிருஷ்ணா மகா வித்தியாலயம்

தரம்:13

தேர்ச்சி- 10 :- இலங்கையின் சென்மதி நிலுவைச் சமமின்மையை இனங்கண்டு அதற்கான தீர்வுகளையும் செயற்பாடுகளையும் முன்வைப்பார்.

தேர்வுகளில் தேர்ச்சி மட்டம் - 10.8 :- பல்பக்க நிதி நிறுவனங்களின் தொழிற்பாடுகளை ஆராய்வார்.

- பல்பக்க நிதிநிறுவனங்கள்:- சர்வதேச நிதி ஒத்துழைப்பினை வலுப்படுத்தி உலக வர்த்தகத்தை விருத்தி செய்தல் நாணயமாற்று விகிதத்தில் முறையான உறுதியை ஏற்படுத்துதல் என்பவற்றை நோக்காகக் கொண்டு உலக நாடுகள் ஒன்றிணைந்து உருவாக்கிக்கொண்ட நிதி நிறுவனங்கள் பல்பக்க நிதி நிறுவனங்கள் என அழைக்கப்படும்..
- பிரதான பல் பக்க நிறுவனங்கள்
    1) சர்வதேச நாணய நிதியம்
    2) உலக வங்கி

**<u>சர்வதேச நாணய நிதியம்</u>**

- 1944 இல் உருவாக்கப்பட்டு 1945 டிசம்பர் 27 ஆம் திகதி முதல் செயற்படுகின்றது.
- இதன் தலைமையகம் வாஷிங்டனில் உள்ளது.
- தற்போது 189 நாடுகள் அங்கத்துவம் பெற்றுள்ளன.
- அங்கத்துவ நாடுகளுக்கு நிதி பங்குகளை வெளியிடுவதன் மூலம் மூலதனம் திரட்டப்படுகிறது.

**<u>உலக வங்கி</u>**

- 1944 இல் உருவாக்கப்பட்டது.

- இரண்டாம் உலக மகா யுத்தத்தினால்அழிவுக்குட்பட்ட நாடுகளில் மறுசீரமைப்பு, யுத்தம் மீண்டும் ஏற்படுவதை தடுத்தல், பொருளாதார புனர்வாழ்வு, வறுமை தணிப்பு போன்ற நோக்கங்களை அடைந்து கொள்வதற்காக தாபிக்கப்பட்டது.
- அங்கத்துவ நாடுகள் 186 ஆகும்.

**<u>பயிற்சிகள்</u>**

01.சர்வதேச நாணய நிதியத்தின் நோக்கங்களை குறிப்பிடுக?

02.சர்வதேச நாணய நிதியத்தின் தொழிற்பாடுகள் யாவை?

03. உலக வங்கியின் நோக்கங்கள் எவை?